# அக்டோபர் 30 நடப்பு நிகழ்வுகள்

## முக்கியமான நாட்கள்

### அக்டோபர் 30 - டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா பிறந்த நாள் விழா

- அக்டோபர் 30 - இந்தியாவின் அணுசக்தித் திட்டத்தின் தந்தை டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் பாபா, பல முக்கிய நிறுவனங்களுக்கு அடித்தளத்தை அமைத்தார்.

## தேசிய செய்திகள்

### கர்நாடகம்

### மாற்றுத்திறனாளிகளுக்கு பிக் அப் மற்றும் டிராப் வசதி

- கர்நாடக தேர்தல் ஆணையம் மாற்றுத்திறனாளிகளுக்கு பிக் அப் மற்றும் டிராப் வசதியளிப்பை 'Chunavana' மொபைல் செயலி மூலம் வழங்க திட்டமிட்டுள்ளது. இந்த செயலியில் நவம்பர் 1 நள்ளிரவு வரை முன்பதிவு செய்யலாம்.

### கேரளம்

### இந்தியாவின் மிகப் பெரிய உலர் கப்பல் கட்டுமானத்துறைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

- கப்பல், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கேரள மாநிலத்தில் கொச்சி கப்பல் துறைமுகத்தில் நாட்டின் மிகப்பெரிய உலர் கட்டுமானத்துறைக்கான அடிக்கல் நாட்டினார்.
- இது 1,799 ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடையும்.

## சர்வதேச செய்திகள்

### உலகம் முழுவதும் 100,000 மக்கள் காணாமல் போயுள்ளனர்: ICRC

- செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழு, உலகெங்கிலும் 100,000 க்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

**ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கெல் பதவி விலக திட்டம்**

- சமீபத்திய தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவின் காரணமாக ஜெர்மனியின் ஏஞ்சலா மெர்க்கெல் 2021 ம் ஆண்டு அதிபர் பதவியில் இருந்து விலக திட்டம்.

**வணிகம் & பொருளாதாரம்**

**ஜப்பான் 316 பில்லியன் யென் இந்தியாவில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு கடனளிக்க ஒப்புதல்**

- இந்தியாவில் ஏழு முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு 316 பில்லியன் யென் கடன் வழங்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது. மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில், டெல்லி, வடகிழக்கு மற்றும் சென்னை ஆகியவை இதில் அடங்கும்.

**மாநாடுகள்**

**பொது சுகாதார பராமரிப்பு பற்றிய 5வது தேசிய உச்சி மாநாடு**

- இந்தியாவில் பொது சுகாதாரத் திட்டத்தில் சிறந்த மற்றும் பிரதிபலன் சேவைகள், புதிய கண்டுபிடிப்புகள் குறித்த 5-வது தேசிய உச்சிமாநாட்டை மாநில முதலமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் முன்னிலையில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா அசாம் மாநிலம், காஸிரங்காவில் தொடங்கி வைத்தார்.

**இந்தியா-இத்தாலி தொழில்நுட்ப உச்சிமாநாடு**

- புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா-இத்தாலி தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார்.
- இத்தாலி பிரதமர் திரு. கியூஸெப் கோண்டேவும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

**நியமனங்கள்**

- நீதிபதி நரேஷ் ஹரிஷ்சந்திர பாட்டீல் - **பாம்பே உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி**

**திட்டங்கள்**

**நமாமி கங்கே திட்டம்**

- நமாமி கங்கே திட்டத்தின் கீழ் ரூபாய் 929 கோடி மதிப்புள்ள பன்னிரெண்டு திட்டங்கள் ஒப்புதல் பெற்றுள்ளன. 580 கோடி ரூபாய் செலவில் 340 மில்லியன் லிட்டர் டன் கழிவுப்பொருள் உற்பத்தி திறன் கொண்ட டெல்லிக்கான இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளன.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்(MoU), ஒப்பந்தங்கள் & மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

**இந்தியா, கத்தார் கூட்டுக் கமிஷனை நிறுவ முடிவு**

- இந்தியா மற்றும் கத்தார் இரு நாடுகளின் பொது நலன்களை மேம்படுத்துவதற்காக பல்வேறு துறைகளில் தங்கள் உறவை வலுப்படுத்த ஒரு கூட்டுக் குழுவொன்றை நிறுவ முடிவு செய்துள்ளது.

**மாசுபாட்டை கட்டுப்படுத்த 15 ஆண்டு பழமையான பெட்ரோல் மற்றும் 10 ஆண்டு பழமையான டீசல் வாகனங்களை தேசிய தலைநகரத்தில் இயக்க தடை செய்தது**

- சமீபத்திய காற்று மாசுபாடு காரணமாக 15 ஆண்டு பழமையான பெட்ரோல் மற்றும் 10 ஆண்டு பழமையான டீசல் வாகனங்களை தேசிய தலைநகரத்தில் இயக்க உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- தில்லியில் சாலைகளில் அத்தகைய வாகனங்கள் காணப்பட்டால் உடனடியாக அகற்றப்படும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

**தீபாவளி அன்று இரவு 8 மணி முதல் 10 மணி வரை மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என்ற உத்தரவை உச்சநீதிமன்றம் மாற்றிக் கொண்டது**

- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி போன்ற இடங்களில் நேரம் அந்தந்த மாநிலங்கள் முடிவு செய்து கொள்ளலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆனால் இரண்டு மணி நேரத்திற்கு மேல் அனுமதி இல்லை என அறிவிப்பு.

**விளையாட்டு செய்திகள்**

**இந்தியா Vs வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்**

- மும்பையில் நடைபெற்ற 4 வது ஒருநாள் போட்டியில் 224 ரன்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை தோற்கடித்து இந்தியா, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-1 என்ற கணக்கில் என்று முன்னிலை வகிக்கிறது.

**ஐஸ்லே ஆஃப் மேன் சர்வதேச சதுரங்க போட்டி**

- இங்கிலாந்தில் நடைபெற்ற ஐஸ்லே ஆஃப் மேன் சர்வதேச சதுரங்க போட்டியில் இங்கிலாந்தின் மைக்கேல் ஆடம்சை வென்றார் கிராண்ட்மாஸ்டர் அதிபன். இதன்மூலம் மூன்றாவது இடம் பிடித்தார்.

**Join Us on FB:**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

**For WhatsAPP Group - Click Here**